## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
## அசல் வழக்கு எண். 313/2015

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | .. பாலகிருஷ்ணன் | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. கோவிந்த செட்டியார் | தொழில் | .. | எல்.ஐ.சி. முகவர் |
| வயது | .. 81 | ஜாதி | .. | ஆயிர வைசியர் நகரம் |
| கிராமம் | .. சேலம் | நாள் | .. | 25.11.2021 |
| மாவட்டம் | .. சேலம் மாவட்டம் | | | |

1872 ஆம் வருடத்திய சட்டம் 1 ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியான திரு. பாலகிருஷ்ணன் என்பவர், இந்நீதிமன்றத்தில் உதவியாளர் கிரேடு 3 ஆக பணிபுரியும் திருமதி. கோகிலா என்பவரால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வா.சா.1 - பாலகிருஷ்ணன் - 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி.

அசல் வழக்கு எண்.172/1931, நிறைவேற்று மனு எண்.1819/1931, நிறைவேற்று இடைநிலை மனு எண்.1308/1932, அ.வ.எண்.159/1988 இந்த வழக்குகளில் அரசை ஒரு தரப்பினராக சேர்த்துள்ளீர்களா என்றால், அதற்கான அவசியம் இல்லை, அதனால் சேர்க்கவில்லை. மேற்படி சொத்து நீதிமன்ற ஏலத்தில் எடுக்கப்பட்டது. வழக்கு சொத்து நீதிமன்ற ஏலம் மூலமாக எடுக்கப்பட்டது என்பதற்கு ஏதேனும் ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளீர்களா என்றால், தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் சர்வே எண்.260 குறிப்பிடப்பட்டுள்ளதா என்று கேட்டால், இல்லை, சொத்தின் சக்குபந்தி விபரங்கள் காண்பிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு சொத்தின் அ பதிவேடு, அடங்கல் உள்ளிட்ட வருவாய் ஆவணங்கள் அனைத்துமே அரசு பெயரில் தான் உள்ளது என்றால், அது குறித்து எனக்குத் தெரியாது. வழக்கு சொத்தில் ஒரு பஞ்சாயத்து அலுவலகம் உள்ளது என்று சொன்னால், சரிதான். அந்த அலுவலகத்திற்கு நாங்கள் தான் நிலம் கொடுத்தோம். வழக்கு சொத்தில் ஒரு கிராம சேவை மையம், நடைமேடை, பஞ்சாயத்து கழிவறை தொட்டி போன்றவைகள் உள்ளன என்றால், எனக்குத் தெரியாது. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தில் வழக்கு சொத்தில் ஒரு கிராம சேவை மையம், நடைமேடை, பஞ்சாயத்து கழிவறை தொட்டி போன்றவைகள் உள்ளது என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், எனக்கு நியாபகம் இல்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கை

குறித்து இந்தநீதிமன்றத்தில் ஆட்சேபனை ஏதேனும் செய்தீர்களா என்றால், இல்லை. வழக்கு சொத்தில் உண்மையான அனுபவத்தில் இருந்திருந்தால், நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு ஆட்சேபனை அளித்திருப்போம் என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்தில் கிராம சேவை மையம், பஞ்சாயத்து அலுவலகம், பஞ்சாயத்து கழிவறை தொட்டி, ஆகியவை தற்போது உள்ளனவா என்றால், உள்ளது, அதை கட்ட ஆரம்பிக்கும்பொழுதே ஆட்சேபனை தெரிவித்து, அறிவிப்பு கொடுத்தோம், தற்பொழுது அகற்ற கோரித்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். எவ்வளவு நீளம் மற்றும் அகலம் அகற்ற கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால், 20x60 மொலம் அளவிற்கு அகற்றக்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம். மொலம் என்ற அளவை தற்போது வழக்கத்தில் இல்லை என்றாலும், நீதிமன்றத்தை குழப்ப வேண்டும் என்பதற்காக அவ்வாறு கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரியல்ல. பத்திரத்தில் உள்ள அளவை தான் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளோம். சொத்து விபரத்தில் 20x60 என்று குறிப்பிடப்பட்டுள்ளது எனது மொத்த சொத்தாகும். குறிப்பாக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்கும்பொழுது சொத்தின் நீளம் மற்றும் அகலத்தை குறிப்பிட்டு குறிப்பிட வேண்டும் என்றாலும், அவ்வாறு குறிப்பிட்டு இந்த வழக்கில் கூறவில்லை என்பதால், இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்து எங்களுக்குத்தான் உரிமையானது என்று விளம்புகை பரிகாரம் கேட்காத காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்று என்று சொன்னால், சரியல்ல. கிராம ஊராட்சி சேவை மையம், அரசு அனுமதியுடன் ரூபாய் 17,00,000 செலவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக கட்டிய கட்டிடத்தை பற்றி கேள்வி கேட்க எங்களுக்கு உரிமை இல்லை என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் வாதிகளை அனுபவத்தை தடைசெய்தார்கள் என்று கூறுவது தவறு என்று சொன்னால், சரியல்ல. தாவா சொத்தில் நாங்கள் அனுபவத்தில் இல்லை என்று சொன்னாலும், சரியல்ல. அரசு சொத்தை அபகரிப்பதற்காக கூட்டாக சேர்ந்து நீதிமன்றத்தில் மோசடியாக ஒரு தீர்ப்பினை பெற்று, அதன் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால், இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று சொன்னால், சரியல்ல.

ஒப்பம் / பாலகிருஷ்ணன்

ஒப்பம் / திரு. ஆர். ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.